சுருக்கம்

பொதுப்பணிகள் – அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் – 01.06.1988 முதல் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கான தேர்வுநிலை / சிறப்பு நிலையில் ஊதிய நிர்ணயம் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது – சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையினை செயல்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி(பக3(1)த் துறை

அரசாணை (நிலை) எண்.90

நாள் 09.05.2018
விளம்பி வருடம், சித்திரை 26
திருவள்ளுவர் ஆண்டு–2049
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண், 216, நிதி (ஊதியக்குழு)த் துறை, நாள் 22.03.1993
2. அரசாணை (நிலை) எண்.258, பள்ளிக் கல்வி (எம்1)த் துறை, நாள் 06.09.2010
3. அரசாணை (நிலை) எண்.69, பள்ளிக் கல்வி (எம்1)த் துறை, நாள் 18.04.2013
4. அரசாணை (நிலை) எண்.180, பள்ளிக்கல்வி (எம்1)த் துறை, நாள் 06.09.2013
5. அரசாணை (நிலை) எண்.181, பள்ளிக்கல்வி(எம்1)த் துறை, நாள் 06.09.2013
6. சென்னை உயர்நீதிமன்ற சீராய்வு மனு எண்.227/2015 (தொகுப்பு வழக்குகள்) தீர்ப்பாணை நாள் 09.12.2016
7. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.3841/சி5/இ4/ 2011, நாள் 09.02.2017

-------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 28.03.1990 வரை உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு, தொடக்கப்பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு இணையாக பதவி உயர்வு வாய்ப்பு இல்லாததை கருத்தில் கொண்டு, உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும் அரசாணை (நிலை) எண்.304, நிதி (ஊதியக்குழு)த் துறை, நாள் 28.03.1990–இல் தேர்வுநிலை / சிறப்புநிலை ஊதியம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இடைநிலை ஆசிரியருக்குரிய தேர்வு / சிறப்புநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து திரு. என்.கோவிந்தராஜன் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியரால் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியருக்குரிய தேர்வு / சிறப்புநிலை ஊதிய நிர்ணயம் வழங்கிட கோரி தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கு O.A.No.8276/1997 மீதான 07.10.1998 நாளிட்ட தீர்ப்பாணையில், மனுதாரருக்கு 01.06.1988 முதல், அரசாணை (நிலை) எண்.216, நிதி(ஊதியக்குழு)த் துறை, நாள் 22.03.1993ன்படி, தொடக்கப் பள்ளி தலைமையாசிரியருக்குரிய சிறப்புநிலை ஊதிய விகிதமான ரூ.2000–3200 என்ற ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்யுமாறும், அதனால் ஏற்படும் அனைத்து நிலுவை தொகைகளையும் மனுதாரருக்கு வழங்குமாறும் ஆணையிடப்பட்டது. அத்தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசால் பதிவு செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.8747/2009, 14.07.2009 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து உயர்/உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து, மேலே இரண்டாவதாகப்

படிக்கப்பட்ட அரசாணையில், திரு.என்.கோவிந்தராஜன், ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியருக்கு 01.06.1988 முதல் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்துக்கான சிறப்புநிலை ஊதிய விகிதம் ரூ.2000–3200இல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு பணப்பயன்கள் பெற்றளிக்கப்பட்டது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திரு.என்.கோவிந்தராஜன், ஓய்வுபெற்ற இடைநிலை ஆசிரியருக்கு 01.06.1988 முதல் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியருக்கான தேர்வு நிலை/சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம் அனுமதிக்கப்பட்டவாறு அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களாக பணிபுரிந்து பதவி உயர்வின்றி ஓய்வு பெற்ற 3444–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தொடர்ந்த வழக்குகள் மீதான தீர்ப்பாணைகளின் அடிப்படையில், பல்வேறு மனுதாரர்களின் கோரிக்கைகள் அரசுக் கடித எண்.39631/எம்1/2011–2 நாள் 15.04.2011, 07.07.2011 மற்றும் 27.12.2011–இல் நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து பதிவு செய்யப்பட்ட பல்வேறு மேல்முறையீடுகள் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையால் அனுமதிக்கப்பட்டன.

4. உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 01.06.1988 முதல் 31.12.1995 வரையான காலத்தில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள 2044 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள 526 இடைநிலை ஆசிரியர்கள், ஆக மொத்தம் 2570 இடைநிலை ஆசிரியர்களுக்கு தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் நிலையில் தேர்வுநிலை / சிறப்புநிலை வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2570 இடைநிலை ஆசிரியர்களுள் 01.06.1988 முதல் 31.12.1995 வரையிலான காலத்தில் பணியாற்றி, தேர்வுநிலை / சிறப்புநிலை எய்தி ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கும், 01.06.1988 முதல் 31.12.1995 வரையான காலத்தில் பணியாற்றி, தேர்வுநிலை / சிறப்பு நிலை எய்தி ஓய்வு பெற்ற 686 அரசுப்பள்ளி உடற்கல்வி / சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் 188 நிதியுதவி பெறும் பள்ளி உடற்கல்வி / சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு மட்டும் உச்சநீதிமன்றத்தில் அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறப்பு விடுப்பு மனு, சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசால் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தாக்கல் செய்யப்பட உள்ள இதனை ஒத்த ஏனைய வழக்குகளில் நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப்புகளின் அடிப்படையில் எடுக்கப்படும் மேல் நடவடிக்கைக்கும் உட்பட்டு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் நிலையில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்து, அதற்கான பணப்பலனை ஒரே தவணையாக வழங்கிட மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணை வெளியிடப்பட்டது

6. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்கான தேர்வு / சிறப்பு நிலையில் 01.06.1988 முதல் ஊதிய நிர்ணயம் செய்திட கோரி வழக்கு தொடர்ந்து பெறப்பட்ட தீர்ப்பாணைகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து மனுதாரர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்த 37 மனுதாரர்களுக்கு மட்டும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்கான தேர்வு / சிறப்பு நிலையில் அனுமதித்து அரசாணை (நிலை) எண்.27, பள்ளிக் கல்வித் துறை, நாள் 06.02.2017–ல் ஆணை வெளியிடப்பட்டது. மேலும், இதன் தொடர்ச்சியாக, பிரிதொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளின் மீது செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு வழக்குகளில் (W.A.S.R. No.96382/14.11.2013) பெறப்படவுள்ள இறுதி

தீர்ப்புகளுக்குட்பட்டு 3 மனுதாரர்களுக்கு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்கான தேர்வு / சிறப்பு நிலையில், ஊதிய நிர்ணயம் செய்து, ஒய்வூதியப் பயன்களை அனுமதித்து அரசாணை (நிலை) எண்.53, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.03.2017–ல் ஆணை வெளியிடப்பட்டது.

7. இந்நேர்வில், பல்வேறு வழக்குகளுள், சில வழக்குகளில் மனுதாரர்களின் கோரிக்கையினை அனுமதித்தும், சில வழக்குகளில் மனுதாரர்களின் கோரிக்கையினை நிராகரித்தும் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வேறுபட்ட தீர்ப்புகளை வழங்கியுள்ளன. பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள் / சிறப்பு ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்கள் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்குரிய தேர்வு / சிறப்புநிலை ஊதிய நிர்ணயம் கோரி தொடர்ந்த தொகுப்பு வழக்குகளில் நீதிப்பேராணை மனு எண்.4505/2012 மற்றும் இதர தொகுப்பு வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் 18.11.2013–ம் நாளன்று வழங்கிய தீர்ப்பில் மனுதாரர்களின் கோரிக்கையினை நிராகரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர்கள் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்குகளில் (W.A.No.352 Batch Cases) சென்னை உயர்நீதிமன்ற அமர்வு மேல்முறையீட்டு மனுக்களை அனுமதித்து 04.02.2015 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தொடர்பான அனைத்து மேல்முறையீட்டு தொகுப்பு வழக்குகளிலும் இவ்வகையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டது. மேற்கண்ட மேல் முறையீட்டு வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பாணைகளை எதிர்த்து அரசால் சீராய்வு மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

8. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு / அரசு உதவி பெறும் தனியார் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் பணியிடத்தில் தேர்வு / சிறப்புநிலை ஊதிய விகிதத்தில் ஊதிய நிர்ணயம் கோரி தொடரப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வுக்கு மாற்றப்பட்ட, சென்னை உயர்நீதிமன்ற சீராய்வு மனு எண்.227/2015 etc., பல்வேறு மனுக்களில் (Review Applications filed by Department, Writ Appeals filed by the petitioners, fresh Writ Petitions) 09.12.2016 அன்று கீழ்க்கண்டவாறு பொதுவான தீர்ப்பாணை வழங்கப்பட்டது.

"38. Today, when the matters are taken up for consideration, keeping in mind the financial strain that would fall on the State exchequer in the event of implementation of the G.O., and in order to give quietus to the issue, we feel it appropriate to fix the date as 01.03.2017 from which date onwards, the Government shall calculate and revise the pension and family pension (without arrears) based on the revised scales of pay by implementing G.O., for which the learned Advocate General and the Learned Counsels appearing for the Teachers fairly acceded to the same. Accordingly, we pass the following:-

i) The Government is directed to implement the G.O. (Ms) No.216, dated 22.03.1993 for the period between 1.6.1988 and 31.12.1995, on and from 01.03.2017 onwards in respect of all the Secondary Grade Teachers of High/Higher Secondary Schools including the Special Teachers who attained Selection Grade / Special Grade during the above said period, on par with the pay scale of Primary School Headmaster;

ii) Consequently, the Government shall calculate and revise the pension of those who retired from service and revise the family pension in respect of those who expired, based on the revised scales of pay in terms of G.O.(Ms)No.216, dated 22.03.1993 payable on and from 01.03.2017.

iii) It is made clear that the beneficiaries under this order, are not entitled to the arrears of revised pay scales;

iv) It is further made clear that the benefits as directed above, shall be extended to the parties who are before this court alone and no fresh Writ Petitions would be entertained on and from 09.12.2016;

v) The Government is directed to expedite the process of calculating and fixing the revised pension and family pension and we do hope that the Government will complete the same as early as possible without making any further delay;

vi) All the matters which are at SR stage and listed before this Court are also ordered and disposed of by this common order and consequently, connected MPs thereof, are ordered;

39. With the above directions, all the captioned matters, viz., Wirt Appeals, Writ Petitions, and Review Applications are disposed of and the Contempt Petitions are closed. There shall be no order as to costs. Consequenty, all connected Miscellaneous Petitions are closed."

9. மேற்கண்ட உயர்நீதிமன்ற அமர்வின் தீர்ப்பணையினை செயல்படுத்தும் பொருட்டு பள்ளிக்கல்வி இயக்குநர், மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து தீர்ப்பாணை பெறப்பட்டு ஓய்வு பெற்ற அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் இடைநிலை / சிறப்பாசிரியர்களுக்கு 01.06.1988 முதல் 31.12.1995 வரையிலான 5வது ஊதிய திருத்த காலத்தில் தேர்வுநிலை அல்லது சிறப்பு நிலை எய்தியவர்களுக்கு மட்டுமே தகுதி உண்டு என மேற்கண்ட தீர்ப்பாணையின் பத்தி எண்.38(i)-ல் ஆணையிடப்பட்டுள்ளதால், 01.06.1988 முதல் 31.12.1995 வரையான காலகட்டத்தில் தேர்வுநிலை / சிறப்புநிலை எய்தியவர்களுக்கு மட்டும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குரிய தேர்வுநிலை/சிறப்புநிலை ஊதிய விகிதத்தில் கருத்தியலாக ஊதிய நிர்ணயம் செய்து, ஓய்வு பெற்ற கடைசி நாளில் பெறக்கூடிய அடிப்படை ஊதியத்தினை கருத்தியலாகக் கணக்கிட்டும், அதனடிப்படையில், மார்ச் 2017 முதல் திருத்திய ஓய்வூதியம் அனுமதிக்கும் வகையில் பொதுவான ஆணை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

10. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது :–

i) அரசாணை (நிலை) எண்.216, நிதி(ஊதியக்குழு)த் துறை, நாள் 22.03.1993–ன்படி, பள்ளிக் கல்வித் துறையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு 01.06.1988 முதல் 31.12.1995 வரையிலான 5வது ஊதிய திருத்த காலத்தில், தேர்வு /சிறப்புநிலை எய்தியவர்களுக்கு மட்டும் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்திற்கான தேர்வு / சிறப்புநிலை ஊதிய விகிதத்தில் கருத்தியலாக ஊதிய நிர்ணயம் செய்து, அதனடிப்படையில் ஓய்வு பெற்ற கடைசி நாளில் பெறக்கூடிய அடிப்படை ஊதியத்தினை கருத்தியலாகக் கணக்கிட்டு, அதனடிப்படையில் 01.03.2017 முதல் முன் தேதியிட்டு திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் அனுமதித்திடலாம்.

ii) இந்நேர்வு தொடர்பான, மேல்முறையீடு, நீதிப்பேராணை மனுக்கள் ஆகியவற்றின் மீது வெவ்வேறு நாட்களில் வழங்கப்பட்ட தீர்ப்பாணைகளில் இடம் பெற்றுள்ள மனுதாரர்களாகிய ஆசிரியர்களுக்கு மட்டுமே இப்பயன்கள் வழங்கப்படவேண்டும். ஏனையோருக்கு இப்பயன்கள் வழங்கப்படமாட்டாது.

iii) வழக்கு தொடர்ந்து காலஞ்சென்ற மனுதாரர்களின் நேர்வுகளில் மேற்கண்டவாறு கருத்தியலாக தேர்வு /சிறப்புநிலை ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு அதனடிப்படையில் திருத்திய குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்பட்டு மார்ச் 2017 முதல் வழங்கப்படும்.

iv) இதன்படி பயன் பெறும் மனுதாரர்களுக்கு கருத்தியலாக ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு, திருத்திய ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் வழங்கிட கருதுவதால், மார்ச் 2017க்கு முந்தைய காலத்திற்கு நிலுவைத் தொகை வழங்கப்பட மாட்டாது.

v) இவ்வழக்குகளில் தொடர்புடைய மனுதாரர்களுக்கு மட்டுமே இப்பயன்கள் வழங்கப்படும்.

vi) இவ்வரசாணையினை உடனடியாக செயல்படுத்தி திருத்திய ஊதிய நிர்ணயம் செய்து, அதனடிப்படையில் ஓய்வூதிய நிர்ணயம் செய்து, மனுதாரர்களுக்கு உரிய பலன்களை உடனடியாக வழங்கிட காலதாமதமின்றி துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii) இப்பொருள் தொடர்பாக ஏற்கனவே வழக்குகள் தொடர்ந்தும் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தொடர்ந்து உயர்நீதிமன்ற தீர்ப்புகளின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட நிலுவைத்தொகையினை பிடித்தம் செய்திட வேண்டியதில்லை

11. மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு கருத்தியலான ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை திருத்தியமைப்பதற்கான கருத்துருவினை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.23892/ நிதி(சி.எம்.பி.சி)த் துறை நாள் 09.05.2018–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
சார்ந்த மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை –18
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
<u>நகல்</u>
நிதித் (சி.எம்.பி.சி/கல்வி–II) துறை, சென்னை – 9
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின்
நேர்முக் உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.